<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

<u>**MCOP. No.5/2025**</u>

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 05-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளருக்கு நான் அனுப்பிய புகாரின் நகல் எ.ம.சா.ஆ.1, அதை மாவட்ட கண்காணிப்பாளர்பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை எ.ம.சா.ஆ.2,

<u>**மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

எனக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கில் நான் ஆஜாராகி வருகிறேன் என்றால் சரிதான். நான் ஓட்டிசென்ற வாகனம் விபத்தில் சம்மந்தப்பட்டதாக போலிசார் என்னை கைது செய்து நிலைய பிணையில் விட்டார்கள் என்றால் சரிதான். என்மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 15 நாட்கள் பணிநீக்கம் செய்யப்பட்டேன். என்னுடைய ஓட்டுநர்உரிமத்தை சுமார் 2 மாதங்கள் தற்காலிமாக ரத்து செய்தார்கள். என்மீது வழக்கு பதிவுசெய்யப்பட்ட பின்னர் அதை ரத்துசெய்ய குற்றவியல் நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் நான் மனு செய்யவில்லை. நிர்வாகம் தரப்பில்

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 புகாரின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றும், அதனால் தான் என்மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிபதற்காக நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.